புரட்சிக்கவிஞருக்குப் பெருமை சேர்க்கும் தமிழ் மொழி வாரம் அறிவிப்பு –

# திராவிட மாடல் அரசின் மற்றொரு மணிமகுடம்!

தமிழர் வாழ்வில் இன்று மறுமலர்ச்சி மேலோங்கி நிற்கிறது. அது தமிழினத்தின் விடுதலைப் போராகக் குமுறுகிறது! தமிழ் நாட்டுக்குரலாக இந்திய நாடெங்கும் இடி முழக்கமாக முழங்குகிறது. தமிழர் நரம்புகளை முறுக்கேற்றி அதிர வைக்கிறது. அது ஓர் புது மலராக மலர்ச்சிக்குரியத் தென்றலாக உயிர் மணம் வீசுகிறது. தமிழர் வாழ்வென்னும் தோட்டத்தில் ஓர் இன்னிசைக் குரல் ஒலிக்கிறது.

ஆம்! ஒரே நாடு! ஒரே மொழி! ஒரே கல்விக் கொள்கை என சனாதனச் சாக்கடையர்கள் கொக்கொரிக்கும் வேளை, இந்தியா என்ற நாட்டைப் பிளவுபடுத்தி சீர்குலைக்கும் சூழல், உயிரின வளர்ச்சி உயர் படியை நோக்கிச் செல்வதற்குப் பதில் தலைகீழ் தாழ் நிலை நோக்கிப் பயணிக்கும் ஓர் ஒன்றிய அரசு என தத்தளிக்கும் சூழலில் அறிவு வளர்ச்சி அலை, மறுமலர்ச்சி அலை, சீரிய தமிழர் வாழ்வை மேலும் சீராக்கும் நீடித்த உயிராற்றலுடன், தமிழ் வரலாற்றையும், தொன்மையையும், பண்பாட்டுக் கூறுகளையும் மீட்டெடுத்து, பழமையின் எல்லையில் நில்லாது, இன வாழ்வின் உள்ளியக்கம், உள்ளாற்றல் ஆகியவற்றால் எழுந்து எதிர்கொண்டு அயல் மொழி ஆதிக்கத் திணிப்பை அயராது எதிர்கொண்டு, தமிழினத்தின் மேன்மைக்காக இரவும் பகலும் உழைக்கின்ற ஓர் அரிய மனிதராக தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிற ஒரு முதல்வர் தான் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற ஒரு மாமனிதர்!

**“தமிழாய்ந்த தமிழன் தான்**
**தமிழ்நாட்டின் முதலமைச்சாய்**
**வருதல் வேண்டும் !”**
என்று துணிந்து போர் முரசம் கொட்டி,

**“கடல் போல் எழுக! கடல்**
**முழக்கம் போல் கழறிடுக,**
**தமிழ் வாழ்க என்று!**

**கெடல் எங்கே தமிழர் நலம்,**
**அங்கெல்லாம் தலையிட்டுக்**
**கிளர்ச்சி செய்க!”**

– என்று கட்டளையிட்டவர் கவி வேந்தன் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

இந்தக் கவிதை வரிகளின் உயிர் நாரில் தொடுத்த மலராக மணம் வீசுகின்றார் நம் நெஞ்சம் இனிக்கும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள்.

புரட்சிக் கவிஞரின் பிறந்த நாளான ஏப்ரல் 29 முதல் மே 5 வரை உலகத் தமிழ் மொழி வாரமாகக் கொண்டாடுவோம் என உலக மக்கள் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அனைவரின் நெஞ்சமெல்லாம் நெகிழும் வண்ணம் ஓர் அறிவிப்பை வெளியிட்டு நம் கனவுகளை நினைவுகளாக மாற்றியுள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் பெப்ருவரித் திங்கள் 21 ஆம் நாளை உலகத் தாய்மொழி நாள் என பன்னாட்டு அவை அறிவித்துக் கொண்டாடிக்கொண்டிருக்கும் அந்நாளில் அந்த வரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கியும், உலகின் முதன் மொழியாம் தமிழ் மொழி அல்லவா தாய்மொழி நாளின் குறியீடாக அமைந்திருக்க வேண்டும் என்ற ஆதங்கத்துடன் தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் இந்து தமிழ் திசை நாளேட்டில் ஒரு கட்டுரை வெளியிட்டிருந்தோம்! அந்தக் கட்டுரையின் தலைப்பு “உலகத் தமிழ் நாள்– எப்போது கனவு பலிக்கும்”என்பதாகும்.

உலக நடப்புகளையும், உலகத் தமிழர்களின் உணர்வுகளையும் ஊன்றிக் கவனித்து

“முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப்படும்”

என்ற வள்ளுவன் வாய்மொழியின் வழித் தோன்றலாக திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் நீங்கள் மொழி நாள் எனக் கேட்டால் நான் மொழி வாரம் தருகிறேன் என எமக்கு வரம் தந்துள்ளார்.

இதன் மூலம் உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் 12 கோடிக்கும் அதிகமான தமிழ் மக்கள் தம் மொழியின் பெருமைகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் ஓங்கி ஒலித்திட இந்த அறிவிப்பு வழி கோலியுள்ளது.

இந்தி ஏகாதிபத்தியம் வெறிகொண்டு தலைவிரித்தாடும் இவ்வேளையில் வந்திருக்கும் இவ்வறிவிப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். தமிழ் நாடு தான் இந்திய நாட்டின் விடுதலைக்கு முன்பாகவே இந்தி மொழி ஆதிக்கத்தை எதிர்த்துக் குரல் கொடுக்கும் மாநிலம் ஆகும். 1938 முதல் 1940 வரை நடந்த இந்தி எதிர்ப்புப் போர், மொழிப் போரின் முதல் போராகும். இந்தப் போரில் வெற்றி தேடியப் பெருமை தந்தை பெரியார்அவர்களையே சாரும். மொழிப் போரில் வெற்றி கண்ட பெரியாரை வாழ்த்தி அன்றைய நாளில் காயிதே ஆஜிம் முகம்மதலி ஜின்னா “இந்திப் போரில் நீர் வெற்றி பெற்றீர், உங்களுக்கு என் மனம் நிறைந்த வாழ்த்து” என்று தந்தி அனுப்பினார். அந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த போராகும்.

மறுமலர்ச்சியின் தன்மையறியாத தற்குறிகள் சில நேரங்களில் தமிழ் நாட்டிலிருந்து வரும் அறிவிப்புகளைப் பலவாறாகக் கண்டு மிரளுவதுண்டு! அந்த மிரட்சியில் தான் தற்போது மோடி , அமித்ஷா மற்றும் இவர்களின் கங்காணியாக செயல் படும் ஆர். என். இரவி ஆகியோர் அரண்டு போயிருக்கிறார்கள். சனாதன ஒன்றிய அரசு சமசுகிருத நாள், இந்தி மொழி வாரம் என்றெல்லாம் அறிவித்து கோடிக்கணக்கில் மக்கள் வரிப்பணத்தை வாரியிறைத்து இந்திய மாநிலங்களில் எல்லாம் அந்தந்த மாநில மக்களின் விருப்பங்களுக்கு மாறாக இந்தி திணிப்பை மேற்கொண்டு வருகிற தற்காலச் சூழலில் தமிழ் மொழி வாரம் கொண்டாடப்படும் என அறிவித்திருப்பது தொலைநோக்குடன் ஓர் அரசியல்



**சு.குமணராசன்,**
சமூக செயற்பாட்டாளர்,
எழுத்தாளர்,
நிறுவுநர், இலெமூரியா
அறக்கட்டளை, மும்பை

சூட்சுமம் நிறைந்த தெளிவான முடிவாகும். காரணம் தமிழ் நாட்டில் தாய்மொழி காக்கத் தாய்க்குலம் வீறு கொண்டு எழுந்த வரலாறு நேற்று முளைத்தக் காளான்களுக்கு எப்படி புரியும்?

உலகப் போராட்டங்களை ஒப்பிடும் வகையில் 13-11-1938-ல் சென்னை ஒற்றைவாடை அரங்கில் தமிழர் மாநாட்டைத் தாய்மார்கள் கூட்டினர். அந்த மாநாட்டில் தலைமையுரையாற்றிய மறை மலை அடிகளின் மகள் திருமதி நீலாம்பிகை அம்மையார்

“நம் தாய் உணவின்றி அழுது கொண்டிருக்கும் போது உணவு வேண்டாத மற்றொருத்தியை வலிய அழைத்து வந்து சோறும் போட்டு கூரையும் கொடுப்பது போல, நம் தமிழ்த் தாய் தமிழுணவின் குறைவால் வருந்திக் கொண்டிருக்கும்போது, அயல் நாட்டவளான இந்தி என்னும் பணிப் பெண்ணை வலிய அழைத்து வந்து கட்டாயமாக நுழைப்பதைத் தமிழ்த் தாயின் மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் எதிர்க்க வேண்டும்” என அறைகூவல் விடுத்தார்.

14-11-1938 அன்று தாய்க்குலத்தின் முதல் அணி வகுப்பு அணியமாகியது. டாக்டர் தருமாம்பாள், இராமாமிர்தம் அம்மையர், பட்டம்மாள், சீதம்மாள் உட்பட 73 தாய்மார்கள் 32 குழந்தைகளுடன் மறியல் செய்து சிறையேகிய வரலாறு வட இந்தியச் சின்னப் பையன்களுக்கு தெரியாது. பெரியார் சிறையேகி 167 நாட்களைக் கழித்தார். பெரியாரை விடுதலை செய்தால் தான் நாட்டில் அமைதி நிலவும் என்ற நிலையில் விடுதலை செய்தார்கள். அப்போது பெரியார் சொன்ன சொல் எடுத்த பணி முடியவில்லை; இந்தி மொழியும் போகவில்லை; பிறகு நான் ஏன் வெளிவந்தேன் என்றார். விடுதலை செய்த காரணத்திற்காக பெரியார் போர்க் கொடியை கீழே போடவில்லை. கட்டாய இந்தி ஒழிக்கப்படும் வரை ஓய்வு இல்லை, உறக்கமில்லை என்று மீண்டும் போராடத் திட்டமிட்டார். அதன் விளைவு 21-2-1940 அன்று கட்டாய இந்தித் திட்டத்தை கை விட்டதாக அறிவித்தது. இன்று வங்காள தேச முன்னெடுப்பால் கொண்டாடப்படும் பெப்ருவரி 21 உலகத் தமிழ் என்பதை 1940 ஆம் ஆண்டே முன்னெடுத்த இனம் தமிழ் இனமாகும்.

தமிழ் காத்தோம்! இந்தி ஏகாதிபத்தியத்தின் முதல் படையெட்டுப்பை முறியடித்தோம் என்று தமிழர்கள் வெற்றி விழாக் கொண்டாடினர்.

**“ எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்**
**மங்காத தமிழென்று சங்கே முழங்கு**
**எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்**
**இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே”**

என்று தோள் தட்டி முழங்கியவர் புரட்சிக் கவிஞர் பாரதி தாசன்.

தற்போது நமது முதல்வர் அறிவித்திருக்கின்ற இந்த அறிவிப்புக்குப் பின்னால் தமிழ் நாட்டில் மொழி உரிமை வரலாறு புதைந்து கிடக்கிறது.

உலகின் முதன் மொழியாக விளங்கும் தமிழ் மொழியின் மேன்மையைப் பாதுகாப்பது தமிழர்களின் கடமையாயாகும். அவ்வவகையில் தமிழ் மொழியின் மேன்மைகளை மட்டுமல்ல, அவற்றின் சிறப்பை தொடர்ந்து பாதுகாக்க என்னவெல்லாம் செய்ய வேண்டுமென்பதை அடுக்கடுக்காய் திட்டங்களை வகுத்துத் தந்தவர் நமது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆவார். எனவே, அவருடைய பிறந்த நாளாம் ஏப்.29-ஆம் நாள் முதல் மே மாதம் 5 ஆம் நாள் வரை

தமிழ் மொழி வாரம் என அறிவித்திருப்பது முதல்வரின் அறிவுக் கூர்மையையும் தொலை நோக்குத் தன்மையை வெளிப்படுத்தியுள்ளது. திராவிட மாடல் அரசின் மற்றொரு மணிமகுடமாக இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

ஒரு செடியின் வளர்ச்சி பெரிதும் வித்தின் இயல்பையும் நிலத்தின் இயல்பையும் கொண்டிருப்பதைப் போல தற்போது ஒளிவிடும் திராவிட மாடல் அரசு சுயமரியாதை இயக்கக் காலந்தொட்டு தமிழினத்தின் வருங்கால வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு தமிழினத்தின் பாதுகாவலானக விளங்குகிறது. அயற்பண்புகளால் தமிழினம் அழிந்து விடாத படி இனப் பண்பின் காவலனாக விளங்குகிறது. எனவே 110 விதியின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள தமிழ் மொழி வாரம் என்பது ஒரு சாதாரண அறிவிப்பு அல்ல!

தமிழ், தமிழர், தமிழர் உரிமை, தமிழ்ப் பற்று, தமிழ்ப் பண்பு என்ற உரிமைச் சங்கிலி அறுபட்டு, அதற்கு நேர் மாறான அடிமைச் சங்கிலியை உருவாக்கி தமிழ் இனத்தின் இரண்டகர்களாக, இடைத் தரகர்களாக சில காலம் பதவி வகித்த அடிமையர் ஆட்சியின் அலங்கோலங்களையும் சீர் செய்யும் விதமான அறிவிப்பு இதுவாகும்.

திராவிட இயக்கத்தின் தொடர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் ஓர் அளவு கோலாக வந்துள்ள இந்த அறிவிப்பு உலகத் தமிழர் சிந்தையெல்லாம் குளிர வைத்துள்ளது. தமிழினம் என்றும் நம் முதல்வருக்கு நன்றிக் கடன் பட்டுள்ளது.

## ஆண்டியும் போண்டியும்



**ஆண்டி :** ஏன்ய்யா; பி.எச்.டி. முடித்தவர்களால் போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற முடியலைன்னு பேசி இருக்காரே ஆளுநர் ரவி?

**போண்டி :** **ஆமாய்யா, இவர் ஐ.பி.எஸ். தானே? அத்தலட் போட்டியில வெற்றி பெற்று விடுவாரா?**



சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், நேற்று முன்தினம் (25.04.2025) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். க மணிவாசன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அரியலூர் பொன். பக்கிரி
### ஏப்ரல் 27 (2015)



**அரியலூர் பகுதியில் கழகம் வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.**

**1977ஆம் ஆண்டு முதல் ஏழு முறை அரியலூர் நகரச் செயலாளராகவும் – தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**1996–ல் அரியலூர் பேரூராட்சி மன்றத் தலைவராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**இந்தி திணிப்பு எதிர்ப்பு போராட்டம், சட்டநகல் எரிப்பு போராட்டம் போன்ற கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

### அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஏப்.27–

நேற்று முன்தினம் (25.04.2025) சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சுற்று லாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். க மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசுகையில்,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சுற்றுலா வளர்ச்சிக்காக 1971 ல் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு முழுவதும் 26 ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளுடன் செயல்பட்டு வருகின்றன. மேலும் நீங்காத அனுபவங்களை தரும் வகையில் 9 படகு குழாம்கள் மூலம் சுற்றுலா பயணிகளுக்கு படகு சவாரி மேற்கொள்ள சேவை அளித்து வருகின்றது. 3 தொலைநோக்கி இல்லங்களையும் செயல்படுத்தி வருகின்றது. மேலும் 5 வால்வோ சொகுசு பேருந்துகள், 6 அதிநவீன சொகுசு பேருந்துகள், 3 சிறிய ரக சொகுசு பேருந்துகள் என 14 பேருந்துகள் மூலமாக மாமல்லபுரம் சுற்றுலா, வெளிமாநில சுற்றுலா பயணிகளின் விருப்பமான 8 நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா உள்ளிட்ட 52 வகையான சுற்றுலா பயணத்திட்டங்களை செயல்படுத்தி குறைந்த செலவில் பொதுமக்கள் சுற்றுலா பயணம் மேற்கொள்ள சேவையாற்றி வருகின்றது என்றார்.

சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் பிரிவுகள், கட்டமைப்பு வசதிகள், செயல்பாடுகள் குறித்து உயர் அலுவலர்களிடம் கேட்டறிந்தார். சுற்றுலா திட்ட பணிகள், விழாக்கள் குறித்து, மாவட்டம் வாரியாக உள்ள சுற்றுலா அலுவலர்களிடம் சுற்றுலா தளம் சிறப்பு அம்சம், நடைபெற்றுவரும் திட்டப்பணிகள், மேலும், புதிய சுற்றுலா தலங்கள் உருவாக்குவதற்கான வழிமுறையை ஆராயவும் மற்றும் சுற்றுலா தலங்கள் அமைக்க மற்ற துறைகளிடமிருந்து தடையில்லாச் சான்று பெறுவது குறித்தும், சுற்றுலாவிற்கான முக்கிய இடங்களை தேர்ந்தெடுத்து புதிய சுற்றுலா தலங்களை உருவாக்குவதற்கான திட்டங்கள், கடற்கரை சுற்றுலா மேம்படுத்துவது, பிரபலம் அடையாத சுற்றுலா தலங்களை பிரபல படுத்த புதிய திட்டங்கள் வகுத்தல், மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் சுற்றுலாவை மேம்படுத்த புதிய திட்டங்கள் கொண்டுவருவது மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்கள், படகு இல்லங்கள் செயல்பாடு குறித்தும் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆய்வு மேற்கொண்டார்கள்.

மேலும், அமைச்சர் பேசுகையில் முதலமைச்சர் அவர்கள் ஓட்டல் தமிழ்நாடு உணவகங்களுக்கு அமுதகம் என்று பெயர் சூட்டி உணவகங்கள் சுற்றுலா பயணிகளுக்கு எளிதில் அடையாளம் காணச் செய்துள்ளார்கள். மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 2030 ஆம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் டாலர் இலட்சிய இலக்கினை அடைய சுற்றுலாத்துறையின் பங்களிப்பு முதன்மையாக இருக்கும் வகையில் பணியாற்றிடுவோம் என்று அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ச.கவிதா உள்பட சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.எம்.தைலப்பன்
### ஏப்ரல் 27 (2015)



**இளமைக்காலம் முதல் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு புலவன்காடு கிளைக் கழகச் செயலாளர், ஒரத்தநாடு வட்டக் கழகச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**புலவன்காடு ஊராட்சி மன்றத் தலைவராகவும், மாவட்ட ஊராட்சி உறுப்பினராகவும், 1977ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஒரத்தநாடு தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றிபெற்று சிறப்பாக மக்கள் பணியாற்றி தொகுதி வாழ் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**விலைவாசி உயர்வு போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம், ஈழத் தமிழர் போராட்டம் உள்ளிட்ட தலைமை அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தனது இறுதி காலம் வரை எளிமையாக குடிசை வீட்டில் வாழ்ந்து வந்த இவர் மகளின் திருமண நிகழ்வு குறித்து தலைவர் கலைஞர் அவர்கள் அவரது குடிசைக்கே நேரில் சென்று விசாரித்து வந்தது குறிப்பிடத்தக்கது.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**